‘வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகள்’ கட்டுரையின் பத்திகளைச் சரியாக வரிசைப்படுத்துக.

LIVEWORKSHEETS

இந்நவீனக் காலக்கட்டத்தில் காலம் மிகவும் வேகம் கொண்டதாகவுள்ளது. வாசிப்பதனால் நாம் பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகின்றது. நாளிதழ்கள் வாசிப்பதன் மூலம் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ள முடியும். அதாவது, அரசாங்கத் திட்டங்களையும் கொள்கைகளையும் அறிந்து அதற்கேற்றவாரு வாழ முடியும். மேலும், நாளிதழ்கள் வாசிக்கும் போது உலகில் நடைப்பெறும் சம்பவங்கள் யாவையும் அறிந்து பொது அறிவு உள்ளவர்களாக வாழ வழிவகுக்கும். மாறாக, 'கிணற்றுத் தவளை போல்' இல்லாது உலக அறிவு கொண்டவர்களாக இருக்க வழிவகுக்கும்.

வாசிப்பு ஒரு மனிதனை முழுமைப்படுத்துகிறது. எந்த ஒரு தொழிலைச் செய்தாலும் அதில் சிறப்பாக திகழ வாசிப்பே பெருந்துணையாக அமைகின்றது. வாசிப்பதற்கு வயது தடையல்ல. வாசிப்பு மூலங்கள் பல உள்ளன. அவற்றுள் சில நாளிதழ்கள், நாவல்கள், கதைப்புததகம், சஞ்சிகைகள் போன்றவையாகும். அவ்வகையில் வாசிக்கும் பழக்கத்தினால் பல நன்மைகள் அடையலாம்.

வாசிப்பதற்கு வயது தடையல்ல. புத்தகங்களை வாங்கிதான் வாசிக்க வேண்டும் என்ற நிபந்தணை இல்லை. மாறாக, பொது நூல் நிலையங்களில் உள்ள பல நல்ல புத்தகங்களை வாசித்து பயன் பெறலாம். பல அறிஞர்களின் நூல்கள் அனைத்தும் பொது நூல் நிலையத்தில் பெற்று வாசிக்கலாம். ஒவ்வொரு மனிதனின் வாசிப்பு பழக்கம் அவர்களின் குழந்தைப் பருவத்திலேயே தட்டியெழுப்ப வேண்டும். எனவே தான், நம்மிடையே இந்த வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து பல நன்மைகளை அடைய இயலும். 'வாசிப்பு நமது சுவாசிப்பு' என்பது போல் நாள்தோறு தவறாது வாசிக்க வேண்டும். இதனையே ஔவையார் 'ஓதாம லொரு நாளும் இருக்க வேண்டாம்' எனக் கூறியுள்ளார்.

மானிடர்கள் தங்களின் அறிவினை வளர்த்துக்கொள்ள பல தரப்பட்ட சிறந்த நூல்களை வாசிப்பது மிக அவசியமாகும். இது அவர்களின் கற்பனைத்திறன் வளர்த்துக் கொள்ள பெரும் உதவியாக இருக்கும். அதாவது, நாவல், சிறுகதைகள் வாசிப்பதன் மூலம் கற்பனைத் திறன் வளரும். மேலும், பல தரமான இலக்கிய நூல்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை வாசிக்கலாம்.

LIVEWORKSHEETS